# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil
₹ 10/-

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXIX YEAR OF OUR LORD JESUS CHRIST, 2024 JUNE No. 06


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### நீதிமொழிகள் 21:1-10

1. ராஜாவின் இருதயம் கர்த்தரின் கையில் நீர்க்கால்களைப் போலிருக்கிறது; அதைத் தமது சித்தத்தின்படி அவர் திருப்புகிறார்.
2. மனுஷனுடைய வழியெல்லாம் அவன் பார்வைக்குச் செம்மையாகத் தோன்றும்; கர்த்தரோ இருதயங்களை நிறுத்துப்பார்க்கிறார்.
3. பலியிடுவதைப்பார்க்கிலும், நீதியும் நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம்.
4. மேட்டிமையான பார்வையும், அகந்தையான மனமுமுள்ள துன்மார்க்கர் போடும் வெளிச்சம் பாவமே.
5. ஜாக்கிரதையுள்ளவனுடைய நினைவுகள் செல்வத்துக்கும், பதறுகிறவனுடைய நினைவுகள் தரித்திரத்துக்கும் ஏதுவாகும்.
6. பொய்நாவினால் பொருளைச் சம்பாதிப்பது சாவைத் தேடுகிறவர்கள் விடுகிற சுவாசம் போலிருக்கும்.
7. துன்மார்க்கர் நியாயஞ்செய்ய மனதில்லாதிருக்கிறபடியால், அவர்கள் பாழ்க்கடிக்கப்பட்டுப் போவார்கள்.
8. குற்றமுள்ளவன் தன் வழிகளில் மாறுபாடுள்ளவன்; சுத்தமுள்ளவனோ தன் கிரியையில் செம்மையானவன்.
9. சண்டைக்காரியோடே ஒரு பெரிய வீட்டில் குடியிருப்பதைப் பார்க்கிலும், வீட்டின்மேல் ஒரு மூலையில் தங்கியிருப்பதே நலம்.
10. துன்மார்க்கனுடைய மனம் பொல்லாப்பைச் செய்ய விரும்பும்; அவன் கண்களில் அவன் அயலானுக்கு இரக்கங் கிடையாது.

# ஆண்டவருக்கு நீங்கள் தேவை!

## THE LORD NEEDS YOU!

*Rev.* ஏஞ்சலின் செல்வகுமாரி, *Hon. Editor-in-Chief*

**அழைப்பின் எதிரொலி**யின் குடும்ப அங்கத்தினர் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்!



வெகு விரைவில் 2024 ஆம் ஆண்டின் முதல் பாதியை முடிக்கப்போகிறோம் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. காலம் வெகுவேகமாகக் கடந்து செல்கிறது. ஆகவேதான் காலத்தை ஞானமாய் நாம் பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வேதாகமம் நமக்குக் கற்றுக் கொடுக்கிறது. ... **காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்** எபேசியர் 5:16. இயேசு கிறிஸ்துவை விட வேறு ஒருவருக்கும் காலங்களைக் குறித்து நன்கு தெரியாது. எப்பொழுது அதை ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும். எப்பொழுது அவர் இவ்வுலகத்திற்கு வருவதின் நோக்கத்தை இவ்வுலகத்திற்கு அறிவிக்க வேண்டும் என்றும் அவருக்குத் தெரியும்.

மாற்கு 11 ஆம் அதிகாரத்தில், இயேசு கிறிஸ்து எருசலேமுக்கு வரும் நிகழ்ச்சி, மிக முக்கியமான நிகழ்ச்சியாகும். அதுவரை, தாமே மேசியா என்று பொதுமக்கள் முன்பு அறிக்கை செய்யவில்லை. ஆனால், அவர் ஒரு கழுதையின்மேல் உட்கார்ந்து எருசலேமுக்குள் வந்தபோது, சகரியா 9:9 இல் குறிப்பிடப்பட்டுள்ள தீர்க்கதரிசனம் நிறைவேறியதால், அவரே மேசியா என்று வெளிப்படையாக மக்கள் முன் அறிவித்தார்.

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....




அழைப்பின் எதிரொலி!

## கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன்
நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!
5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!
தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு
தினந்தோறும் - காலை 2.00 மணியில் இருந்து
தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

* பதிவு செய்யுங்கள் - பிறருக்கும் பகிருங்கள் *

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)




## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



**OUR MISSION POLICY**

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


**HON. EDITOR-IN-CHIEF**
Rev. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.

**HON. MANAGING EDITOR**
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**GENERAL MANAGER**
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM., MBA.

**ADMINISTRATION**
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)

**EDITORIAL BOARD**
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Sis. L. Mariya Anjalin, M.A., M.Sc., B.Ed.
Rev. Dr. K.R. Rajasekaran

**EDITOR, PUBLISHER & PRINTER**
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858
95661 31858

**E.MAIL**
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

**YOUTUBE CHANNEL**
Echo of His Call


கர்த்தருடைய மகிமை என்றென்றைக்கும் விளங்கும்; கர்த்தர் தம்முடைய கிரியைகளிலே மகிழுவார்.
சங்கீதம் 104:31.

கிறிஸ்துவுக்குள் எனதருமை நண்பர்களே!

நமது ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் அற்புதமான நாமத்தில் உங்களை வாழ்த்துகிறோம்!

நீங்கள் அறிந்திருக்கிறபடி, சேப்பாக்கம் (தமிழ் வழி கல்வி), சந்தோஷபுரம் (தமிழ் வழி கல்வி), வேளச்சேரி (இந்தி வழி கல்வி தங்கும் வசதியுடன்) ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளை, 03.06.2024** அன்று திறப்பதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம். படிப்பை முடித்த மாணவர்களுக்கு 01.06.2024 அன்று பட்டமளிப்பு ஆராதனை நடைபெறும். ஆலயம் இல்லாத இடங்களில் பட்டம் பெற்ற மாணவர்கள் தங்களது புதிய கிராம ஊழியங்களை ஆரம்பிப்பார்கள். இதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

M.Div. அல்லது M.Th. படித்த ஆசிரியர்கள், இந்தி வழி வேதாகமக் கல்வியை வழங்கும் நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிக்குத்** தேவைப்படுகிறார்கள். மேலும் இந்தி மற்றும் தமிழ் வழி வேதாகமக் கல்வி பயில, நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளுக்கு** புதிய மாணவர்களும் தேவைப்படுகிறார்கள்.

நமது ஆங்கில வழி கல்வி பயிற்றுவிக்கும் **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கும்** போதுமான மாணவர்கள் கிடைக்க தயவாய் ஜெபியுங்கள். நல்ல ஆவிக்குரிய தலைவர்களை உருவாக்கி, சந்திக்கப்படாத இடங்களில் சபைகளை ஸ்தாபிக்க நாங்கள் பல வழிகளில் முயற்சி எடுத்து வருகிறோம். ஜெபத்தில் எங்களைத் தாங்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

சமீப காலங்களில், கர்த்தருடைய வேலை அதிவேகமாக முன்னேறி வருகிறது. அதே சமயத்தில் ஒருவித ஆவிக்குரிய போராட்டங்களை நாங்கள் சந்தித்து வருகிறோம். நமது ஊழியத்திலுள்ள பணியாளர்கள் அல்லது அவர்களது உறவினர்களில் அநேகர் கொடிய வியாதிகளால் தாக்கப்பட்டுள்ளனர். எனவே அவர்களால் ஊழியத்தில் சரியாகக் கவனம் செலுத்த முடிவதில்லை.

உங்கள் ஜெபங்கள் மூலமாகவும், மனமார்ந்த காணிக்கைகளாலும் எங்களுக்கு உதவுங்கள். சரியான நிதி உதவிகள் இல்லாததால், நமது பணித்தளத்திலுள்ள பல ஊழியர்களுக்கு எங்களது உதவிகளையும், சம்பளத்தையும் அனுப்ப முடியவில்லை. இத்தகைய எங்கள் தேவைகளுக்காக கர்த்தருடைய கண்களையே உண்மையாய் நோக்கிக் கொண்டிருக்கிறோம். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,


போதகர் அலக்ஸ் சாம்சன் சாம்
போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்

(+91) 98410 71858 / 98412 71858, மின்னஞ்சல் : sam@echoofhiscall.org


**அவர்கள் அந்தக் குட்டியை இயேசுவினிடத்தில் கொண்டுவந்து, அதின்மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டார்கள்; அவர் அதின்மேல் ஏறிப் போனார். அநேகர் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்; வேறு சிலர் மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பினார்கள்.** மாற்கு 11:7, 8.



உன்னதத்திலே ஓசன்னா!

இனி தமக்கு என்ன நடக்கப் போகிறது என்று இயேசு கிறிஸ்துவுக்குத் தெரியும். இருப்பினும் அவர் இவ்வாறு


**Our Ministries:** ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) ✺ BIBLECOR - Postal Courses (3 languages) ✺ YouTube Ministry ✺ Online Courses ✺ Theological Correspondence Courses (2 languages) ✺ Church Planting ✺ Nehemiah Bible Colleges ✺ Gospel Printing Press ✺ Great Commission Partners ✺ St. Paul's Matriculation School ✺ Crusades ✺ Community Development

## உங்கள் கவனத்திற்கு!

*நமது அழைப்பின் எதிரொலி ஊழியத்தின் 5 நிமிட தேவ செய்திகளும், ஜெபங்களும் தினமும் காலை 2.00 மணி முதல் தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில்* **Echo of His Call YouTube** *சானலில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. இதைப் பார்ப்பதன் மூலம் கர்த்தரின் கிருபையைப் பெறலாம்.*

*மேலும், (+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய என்னுடைய தனிப்பட்ட* (Personal) *இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

**– போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

வருகை தந்தார். ஏனென்றால் இதுவே சரியான நேரம் என்று அவர் அறிந்திருந்தார். அந்த ஆர்ப்பரிப்பையும், பாடலையும், துதியையும் அவர் கேட்டபோது, இன்னும் சில நாட்களுக்குள்ளாய் அவர் அவமானப்பட்டு, துணிகள் கழற்றப்பட்டு, எச்சில் துப்பப்பட்டு, சாட்டையால் அடிக்கப்பட்டு, சிலுவையில் அறைப்படப் போகிறதை அவர் அறிந்திருந்தார். சிலுவையில் தமக்கு நேரிடப் போகும் மரணம் வரப்போகும் தலைமுறையினருக்கு ஆசீர்வாதமானதாக மாறப்போகிறது என்று அவர் அறிந்திருந்தார். அவரது நொறுங்குதல், முழு மனித குலத்திற்கும் மீட்பைக் கொடுக்கப்போவதை அவர் அறிந்திருந்தார்.

மாற்கு 11:2ஆம் அதிகாரத்தை வாசித்தபோது, மூன்று முக்கிய வார்த்தைகள் என் கவனத்தை ஈர்த்தன:

**உங்களுக்கு எதிரேயிருக்கிற கிராமத்திற்குப் போங்கள்; அதில் பிரவேசித்தவுடனே, மனுஷர் ஒருவரும் ஒருக்காலும் ஏறியிராத ஒரு கழுதைக் குட்டி கட்டியிருக்கக் காண்பீர்கள், அதை அவிழ்த்து கொண்டு வாருங்கள். மாற்கு 11:2**



**கழுதைக் குட்டி கட்டியிருக்கக் கண்ட சீஷர்கள்!**

1. **கண்டுபிடியுங்கள்!**
2. **அவிழ்த்து விடுங்கள்!**
3. **கொண்டு வாருங்கள்!**

## 1. கண்டுபிடியுங்கள்!

தம்முடைய சீஷர்களில் இரண்டு பேரை, ஒரு கழுதையைக் கண்டுபிடிக்க இயேசு கிறிஸ்து அனுப்புகிறார். சமாதானத்தின் அடையாளம்தான் கழுதை. சாலமோன் ஆண்ட காலத்தில், எகிப்திலிருந்து குதிரைகளைக் கொண்டு வந்ததை அறிவோம். குதிரை, யுத்தத்திற்கு அடையாளம். கழுதையானது தாழ்மைக்கு அடையாளமாக இருக்கிறது. மிகுந்த பாரத்தை சுமப்பதால், அப்படிப்பட்ட தாழ்மை நிலைக்கு அது அடையாளமாக இருக்கிறது. அது பார்வைக்கு அழகானதல்ல. யூதர்களால் கழுதைகள், அவர்களது வயல்களிலும், ஆலைகளிலும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன.

ஒரு கழுதையைக் கண்டு பிடிக்கும்படி இயேசு கிறிஸ்து சீஷர்களுக்குக் கட்டளையிட்டார்.

இன்றும் கழுதைகளாகிய உங்களையும், என்னையும் கண்டுபிடிக்கும் பணியில் இயேசு கிறிஸ்து ஈடுபட்டிருக்கிறார். அவரையும் அவரது வார்த்தையையும், அவரது நோக்கத்தையும் சுமக்கிறவர்களை அவர் தேடிக் கொண்டிருக்கிறார். எஜமானாகிய அவருக்காய்த் தங்கள் நேரத்தையும், விருப்பத்துடன் பயன்படுத்தப்பட ஒப்புக் கொடுக்கிற மக்களை அவர் தேடிக் கொண்டிருக்கிறார். ஒரு மனிதவள மேலாளராக சுறுசுறுப்பாகப் பணி செய்து வருகிறார்!

சீஷர்கள் அந்தக் கழுதையைத் தேடிச் சென்றபோது, அந்த கழுதை (அ) வாசலில் கட்டப்பட்டிருந்தது (ஆ) இருவழிச் சந்தியில் கட்டப்பட்டிருந்தது.

2024 ஆம் ஆண்டில் வாழும் நாம் மிகவும் அவசரம் அவசரமாய்ப் பரபரப்புடன் காணப்படுகிறோம். பாஸ்டர் கேட்பார், "ஏன் நீங்கள் வேதபாட வகுப்புக்கு வரவில்லை?" சபையார்: "அதிக வேலை பாஸ்டர், " என்பார்கள்.

பாஸ்டர் : போனவாரம், சபையில் உங்களைப் பார்க்கவில்லையே?

சபையார்: மன்னித்துவிடுங்கள் பாஸ்டர். குடும்ப பொறுப்புகளால் என்னால் வரமுடியவில்லை.

பாஸ்டர் : ஏன் பாடல் ஆராதனைப் பயிற்சிக்கு வரவில்லை?

சபையார்: படிப்பு காரணமாக என்னால் வரமுடியவில்லை. சாரி பாஸ்டர். என்னைத் தப்பாக நினைக்காதீர்கள்.

இவையெல்லாம் முக்கியம்தான். சாத்தான் நம்மை எப்படி 'பிஸி'யாக வைத்திருக்கிறான் என்றும், நமது வேலையால், குடும்பங்களால், உறவுகளால், கல்வியால் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தால் நம்மை எவ்வாறு கட்டி வைத்திருக்கிறான் என்றும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதிகம் சம்பாதித்தால், அதிகம் சேமிக்கலாம் என்று மக்கள் நினைக்கின்றார்கள். இல்லை. இது மிகவும் அர்த்தமற்ற சிந்தை. அதிகமாய்ச் சம்பாதிக்க, அதிகமான செலவுகள் வரும். மக்கள் சில பொருட்களை வாங்குகிறார்கள். அந்த கடனை அடைக்க அதிக மணிநேரங்கள் பணி செய்கிறார்கள். அவர்கள் வாங்கின பொருளை அனுபவிக்கக்கூட அவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை.

தம்மைச் சுமக்க யாராவது உண்டா என்று தேவன் மக்களிடம் தேடிக் கொண்டிருக்கிறார். ஆனால், வாசலில் கட்டப்பட்டவர்கள், வீடு கட்டும் பணி என்ற வாசலில் கட்டப்பட்டவர்கள், தங்களுடைய சொந்த ராஜ்யத்தைக் கட்டும் மக்கள், தங்கள் எல்லைகளை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்று ஓடும் மக்கள் ஆகிய இப்படிப்பட்டவர்களைத்தான் இயேசு கிறிஸ்துவால் காண முடிகிறது.

'பிஸி' (BUSY) என்ற வார்த்தையின் பொருள் என்ன தெரியுமா? 'சாத்தானின் நுகத்தடியின் கீழ் இருக்கிறேன்' என்றுதான் பொருள்.

| | | |
|---|---|---|
| B | → | Being |
| U | → | Under the |
| S | → | Satan's |
| Y | → | Yoke. |

சாத்தான் நம்மை எப்போதும் 'பிஸி'யாக வைத்திருப்பதினால், நம்மால் ஜெபிப்பதற்கோ, வேதம் வாசிப்பதற்கோ, உபவாசிக்கவோ, தியானிக்கவோ, தேவ பிள்ளைகளோடு ஐக்கியம் கொள்ளவோ, சபைக்குச் செல்லவோ முடிவதில்லை.

சாத்தானின் நுகத்தின் கீழ் 'பிஸி'யாக இருப்பதை விட்டு வெளியே வர தேவன் நமக்கு உதவி செய்வாராக. சாத்தானின் நுகம் கனமானதாகவும், பாரம் நிறைந்ததுமாயிருக்கும். **இரட்சகராம் இயேசுவின் நுகத்தடியில் வாருங்கள்.**



இயேசு கிறிஸ்து உங்களை இரட்சிக்கிறார்!

**அவரது நுகம் மெதுவாயும், இலகுவாயும் இருக்கிறது** (மத்தேயு 11:28–30).

இரட்சகராம் இயேசு கிறிஸ்துவின் நுகத்தின்கீழ் நாம் இல்லையென்றால், சாத்தானின் நுகத்தின்கீழ் நாம் இருக்க நேரிடும். சாத்தானின் நுகத்தடியின் கீழ் நாம் இருந்தால், நமது குடும்பத்திற்கோ, தேவனோடு வைக்கும் தனிப்பட்ட உறவுக்கோ, சபையின் ஊழியங்களுக்கோ நம்மால் நேரம் ஒதுக்க முடியாது. நாம் முழுவதுமாய் தேவ சித்தத்திற்கு அல்லது தேவ நோக்கத்திற்கு வெளியே வாழ ஆரம்பித்து விடுவோம். சரியானதைத் தெரிந்து கொள்ளும் நேரம் வந்துவிட்டது.

இருவழிச் சந்தில் ஒருவேளை நீங்கள் வந்திருக்கலாம். குழப்பத்தோடும், கலக்கத்தோடும் நீங்கள் காணப்படலாம்; பல திசைகளில் நீங்கள் இழுக்கப்படலாம்; எந்த திசையைத் தெரிந்தெடுப்பது என்று தெரியாமல் தவிக்கலாம். உங்களுக்காக சிலுவையில் மரித்து, உங்கள் வேதனைகள், கவலைகள், தோல்விகள், சாபங்கள், தண்டனைகள் ஆகியவற்றை ஏற்றுக் கொண்ட இயேசு கிறிஸ்துவின் கரத்தில் உங்களை ஒப்படைத்து விடுங்கள். அவர் உங்கள் பாதையை நேராக்கி, சுத்தப்படுத்தி விடுவார்.

ஆனால் நீங்கள் இவ்வாறு கூறலாம், "நான் என் சிறு வயது முதலே கர்த்தருக்கு ஊழியம் செய்து வருகிறேன். ஆனால் எனக்கு நடந்ததைப் பாருங்கள்; இது எனக்கு நடந்திருக்கக்கூடாது. இப்பொழுதோ நான் கர்த்தரிடத்தில் நெருங்கி வரவே எனக்கு விருப்பமில்லை; அவரை விட்டு தூரத்திலேயே இருந்து விடுகிறேன். அவரிடம் நெருங்கி வேதனை அனுபவிப்பதைவிட இப்படியே தூரத்திலேயே இருந்து விடுகிறேன். எனக்கு உலகமும் வேண்டும், கர்த்தரும் வேண்டும். அவரை தூரத்திலிருந்து பின்பற்றவே விரும்புகிறேன்."



பேதுரு, தூரத்திலே அவருக்குப் பின்சென்றார்!


**தூரத்தில் ...**

இயேசு கிறிஸ்துவை விட்டு தூரத்தில் சென்று அவரைப் பின்பற்றின ஒரு மனிதனைப் பற்றி வேதாகமம் சொல்கிறது. அவ்வாறு அவன் சென்றபின் என்ன காரியங்கள் சம்பவித்தன என்றும் வேதம் தெளிவுபடுத்துகிறது. தூரத்திலிருந்து இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவது ஆபத்தானதாகும். அவ்வாறு நீங்கள் இருந்தால், விரைவில் உங்கள் விசுவாசத்தை மறுதலித்து, தேவனைவிட்டே விலகிச் செல்லும் நிலைக்கு வந்துவிடுவீர்கள். யார் இயேசு கிறிஸ்துவை தூரத்திலே பின்பற்றினது என்று உங்களால் யூகிக்க முடிகிறதா? ஆமாம், பேதுருதான். மத்தேயு 26:58 **பேதுரு, தூரத்திலே அவருக்குப் பின்சென்று...**" என்று குறிப்பிடுகிறது.

தூரத்திலே பின்செல்வது, தோல்விக்கு ஆயத்தமாவதாகும். நீங்கள் தூரத்திலே இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றினால், நீங்கள் இருவழிச் சந்தில் வந்து நின்று, ஏதாவது ஒரு தீர்மானம் எடுக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறீர்கள் என்று பொருளாகிறது. "உன்னைத் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்று இயேசு கிறிஸ்து சொல்கிறார்.

## உ. அவிழ்த்து விடுங்கள்!

!



சீஷர்கள் கழுதையைக் கண்டு பிடிக்கச் சென்றபோது, அது ஒரு இருவழிச்சந்தியில் கட்டப்பட்டிருந்ததைக் கண்டார்கள்!

நமது தேவன் மென்மையான பண்பாளர்; தன்னைக் குறித்து யாரையும் நிர்ப்பந்திக்க மாட்டார். அந்த கெட்ட குமாரனின் தகப்பன் தன் குமாரனுக்காக அன்புடன் காத்திருந்ததுபோல, நம்மை அவர் அதிகமாய் நேசிப்பதினால், அன்போடு காத்திருப்பார். அந்த கெட்ட குமாரனின் தகப்பன், தன் மகன் இன்று திரும்பி வருவான் என்று ஒவ்வொரு நாளும் காத்திருந்தது போல தேவனும் நமக்காகக் காத்திருக்கிறார். நமது பரலோகத் தந்தையின் அன்பு அத்தகையது! உங்களுக்காக இன்னும் காத்துக் கொண்டிருக்கிறார்.

அன்பு சகோதர, சகோதரிகளே, உங்களை தேவன் கட்டவிழ்க்க விரும்புகிறார்! எங்கே கட்டப்பட்டிருக்கிறீர்கள்? எதினால் கட்டப்பட்டிருக்கிறீர்கள்?

நம்மில் சிலர் கட்டவிழ்க்கப்பட விரும்புவதில்லை. ஏனென்றால் நமது மனதும், இருதயமும் ஒன்றுக்கொன்று மாறாய்ச் செயல்படுகின்றன. "தேவனே, உமது சித்தம் நிறைவேறுவதாக!" என்று சில சமயங்களில் ஜெபிக்கிறோம். ஆனால்,

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....


**நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.**

*வேளச்சேரி – முழுநேரம் – இந்தி*
*சேப்பாக்கம் – மாலை நேரம் – தமிழ்*
(திங்கள், செவ்வாய், வியாழன்)

*Registered Candidate for Membership*
Asia Theological Association (ATA)

**உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 54 வருட அனுபவ ஸ்தாபனம்.**

**Certificate in Ministry**
**Diploma in Theology**

**கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**
**உடனே அணுகவும் !**

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS



**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2024 ஜூன் 19 முதல் ஜூலை 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

ஜூன் 19 ⇨ 1969–ம் ஆண்டு முதல், நமது பத்திரிகை ஊழியத்தை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூன் 20 ⇨ நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரி**களின் புதிய மாணவர் சேர்க்கைக்கான முயற்சிகளை ஆசீர்வதித்த கிருபைக்காக...

ஜூன் 21 ⇨ ஜூன் 1, 2024 அன்று சிறப்பாக நிறைவடைந்த **நெகேமியா வேதாகமக் கல்லூரி**யின் பட்டமளிப்பு விழாவை ஆசீர்வதித்தமைக்காக...

ஜூன் 22 ⇨ நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரி**கள் மற்றும் **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**யின் 2023–24–ம் கல்வி ஆண்டு வெற்றிகரமாக நிறைவடைந்ததற்காக...

ஜூன் 23 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** யூடியூப்பின் தமிழ், தெலுங்கு, இந்தி மற்றும் ஆங்கில செய்திகளை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூன் 24 ⇨ தலைமைச் சபை மற்றும் கிளைச் சபைகளின் விடுமுறை வேதாகமப் பள்ளிகளை ஆசீர்வதித்த கிருபைக்காக...

ஜூன் 25 ⇨ நமது ஜெபப் பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள், பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை ஆசீர்வதித்து வருவதற்காக ...

ஜூன் 26 ⇨ உலகளாவிய அளவில் வாலிபர் மற்றும் குழந்தைகளுக்காக தினமும் இரவு 10 மணிக்கு ஜெபிக்கும் **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசனத்தை** ஆசீர்வதித்த கிருபைக்காக...

ஜூன் 27 ⇨ நமது ஊழியத்தின் அனைத்து முயற்சிகளையும் இதுவரை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூன் 28 ⇨ நமது பங்காளர்களின் ஜெப மற்றும் பொருளாதார உதவிகளுக்காக...

ஜூன் 29 ⇨ மே 13, 2024 அன்று நடைபெற்ற நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரி**யின் முன்னாள் மாணவர்களின் கூடுகையை ஆசீர்வதித்த கிருபைக்காக...

ஜூன் 30 ⇨ நமது தலைமைப் போதகர் அவர்களையும், அவரது குடும்பத்தினரையும் எல்லாவித தீயசக்திகளிலிருந்தும் விலக்கிக் காத்துக் கொண்டதற்காக...

ஜூலை 01 ⇨ அர்ப்பணிப்புடன் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைக்கு ஆதரவளித்து வரும் இணை ஆசிரியர்கள் கொண்ட நமது ஊழியத்தை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூலை 02 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**, **நெகேமியா வேதாகமக் கல்லூரி** மற்றும் **அஞ்சல்வழிக் கல்வி முறைகளைக்** கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

ஜூலை 03 ⇨ **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களின் பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினரைக் காத்து வருகிற கிருபைக்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

ஜூலை 04 ⇨ கர்த்தர் **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களில் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் பணியாளர்களை சேர்த்திட வேண்டி...

ஜூலை 05 ⇨ உலகமெங்கும் நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப் பள்ளிகள் மூலம் இரட்சிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் இளம்பிராயத்தினருக்காக...

ஜூலை 06 ⇨ 2024–25ம் கல்வி ஆண்டிற்கான நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரி**களின் தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக...

ஜூலை 07 ⇨ 2024–25ம் கல்வி ஆண்டிற்கான நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**யின் தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக ...

ஜூலை 08 ⇨ தூரதேசங்களில் உள்ள சந்திக்கப்படாத மக்கள் நடுவே, சுவிசேஷ பணியில் ஈடுபட்டிருக்கிற மிஷனரிகளின் தேவ பாதுகாப்பிற்காக ...

ஜூலை 09 ⇨ நமது ஸ்தாபன ஊழியர்களும் மற்றும் அச்சகப் பணியாளர்களும் சுகபத்திரமாக பாதுகாக்கப்பட...

ஜூலை 10 ⇨ இம்மாதத்திற்கான நம் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்படவேண்டி...

ஜூலை 11 ⇨ ஒடுக்கப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதாரநிலை மேம்படவேண்டி...

ஜூலை 12 ⇨ அனைத்து நாடுகளுக்கும் தேவபயமுள்ள தலைவர்களை தந்து ஆசீர்வதிக்க வேண்டி...

ஜூலை 13 ⇨ இந்தியாவில் சுவிசேஷம் செல்லாத இடங்களுக்கு சுவிசேஷம் சென்று ஜனங்கள் இரட்சிக்கப்பட...

ஜூலை 14 ⇨ உலகமெங்கிலும் சமாதானம் நிலவிட ...

ஜூலை 15 ⇨ நமது தலைமைப் போதகரது சுயசரிதை எழுதும் செயல்பாடு நிறைவாய் நிகழ்ந்திட....

ஜூலை 16 ⇨ நமது ஊழிய விரிவாக்கம் மற்றும் உலகளாவிய சுவிசேஷ பிரபல்யத்திற்காகவும் ...

ஜூலை 17 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய சக்திகளிலிருந்தும் தொடர்ந்து பாதுகாக்க ...

ஜூலை 18 ⇨ உலகமெங்கும் களப் பணியாளர்களுக்கு தேவ பாதுகாப்பு கிடைத்திட ...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

“தேவனே, என் இருதயத்தின் வாஞ்சையை நிறைவேற்றும்” என்றும் சில சமயங்களில் ஜெபிக்கிறோம். இந்த முரண்பாடுதான் நமது கிறிஸ்தவ வாழ்க்கையை முன்னேறவிடாமல் தடுக்கிறது. நமக்காக தேவன் திட்டம் செய்து வைத்திருப்பதற்கு நேராய் நாம் முன்னேறிச் செல்ல தேவன் விரும்புகிறார். ஆனால் நமது சொந்த விருப்பங்கள் நம்மை முன்னேற விடாமல் தடுக்கின்றன.



உங்கள் கண்ணீரை ஆண்டவர் அறிவார்!

தேவனுக்கு ஊழியம் செய்து, அவரைப் பிரியப்படுத்தும் வாழ்க்கை வாழ நீங்கள் விரும்பலாம். ஆனால், நீங்கள் கட்டப்பட்டிருப்பதால், உங்களால் அசையக் கூட முடிவதில்லை. மனது நொறுங்கி, உடைந்த நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள். தேவன் ஒருவருக்கே உங்கள் இருதயம் தெரியும். மக்கள் உங்கள் புன்னகையை மட்டும் பார்க்கிறார்கள். இரவின் இருளில், நீங்கள் வடிக்கும் கண்ணீரை யாரும் அறிவதில்லை.

உங்களைக் கட்டி வைத்திருக்கும் கட்டுப்பாடுகளிலிருந்தும், உங்கள் முன்னேற்றத்திற்கு இடையூறாய் இருக்கும் சிக்கல்களிலிருந்தும் உங்களை விடுவிக்க தேவன் வாஞ்சையாயிருக்கிறார். இயேசு கிறிஸ்துவிடம் திரும்புங்கள்; அடிமைத் தனத்திலிருக்கும் தனிப்பட்ட நபர்களை இயேசு கிறிஸ்து அன்றாடம் விடுவித்து வருகிறார். இதுவே உங்கள் நேரம்; உங்களைக் கட்டி வைத்திருக்கும் கட்டுகளிலிருந்து விடுவிக்கும்படி இயேசு கிறிஸ்துவை நோக்கி மன்றாடுங்கள். விடுதலையையும், முன்னேற்றத்தையும் தேடுங்கள். மீண்டும் மீண்டும் உங்களைச் சுற்றி வரும் தடைகளிலிருந்து விடுபட இயேசு கிறிஸ்துவிடம் சேருங்கள்.

## பிலேயாமும் பாலாக்கும் :

பிலேயாம் என்ற தீர்க்க தரிசியைப்பற்றி எண்ணாகமம் 22 ஆம் அதிகாரத்தில் வாசிக்கலாம். ஆசீர்வதிக்க



இஸ்ரவேலரைச் சபிக்க அனுமதி கேட்கும் பிலேயாம்


வும், சபிக்கவும் பிலேயாமுக்கு வல்லமை இருந்ததாக வேதம் சொல்கிறது. ஆகவே, மோவாபின் ராஜா மூன்று முறை இஸ்ரவேலரைச் சபிக்க பிலேயாமைக் கேட்டுக் கொண்டான். துவக்கத்திலிருந்தே, அது தேவனுக்குப் பிரியமானதல்ல என்று அவன் அறிந்திருந்தான். இருப்பினும், இருவழி சந்தியில் கட்டப்பட்டிருந்த அந்த கழுதையைப் போல பிலேயாம் இருந்தான். பணம், புகழ், சொத்துக்கள், வல்லமை, அதிகாரம் மற்றும் பிறர் கவனத்தை ஈர்ப்பத்தில் ஆர்வம் போன்றவைகளால் அவன் கட்டப்பட்டிருந்தான். கர்த்தருக்குப் பிரியமானதிற்கும், அவனது சொந்த விருப்பத்திற்குமிடையில் அவன் சிக்கிக் கொண்டிருந்தான்.

அன்பான நண்பர்களே! பிலேயாமைப் போல இருவழிச் சந்தியில் தொடர்ந்து காணப்படுவீர்களானால், உங்கள் வாழ்க்கை சந்தோஷமாகப் போகாது. அவன் போன வழியில் கர்த்தருடைய தூதனானவர், அவனை எதிர்க்கும் எதிரியாக அவன் முன் நின்றார்.

**... கர்த்தருடைய தூதனானவர் வழியிலே அவனுக்கு எதிராளியாக நின்றார்.** ... எண்ணாகமம் 22:22. இன்று உங்கள் வழிகளை மாற்றிக் கொள்ளாவிட்டால், கர்த்தரே உருவின பட்டயத்தோடு உங்களுக்கு எதிராய் நிற்பார்.

உங்களைக் கட்டவிழ்க்க தேவன் விரும்புகிறார். ஆனால் நீங்கள் கட்ட விழ்க்கப்பட விரும்புகிறீர்களா என்பதுதான் கேள்வி.

## 3. கொண்டு வாருங்கள்!



தேவன் உங்களைக் கட்ட விழ்த்து, தம்மிடத்தில் உங்களைக் கொண்டு வர காத்துக் கொண்டிருக்கிறார்.

அவ்வாறு அவரிடத்தில் வரும் போது, நீங்கள் முதலில் பரிசுத்தவானாகி, பின்புதான் அவரிடம் வரவேண்டும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ அப்படியே வரலாம் – உங்கள் உடைமைகள், வலிகள், ஏமாற்றங் கள், கோபம், வெறுப்பு, தோல்வி, தனிமை ஆகியவற்றுடன் அவரிடம் வாருங்கள்.

உங்கள் போராட்டங்களை இயேசு கிறிஸ்து புரிந்து கொள்வார். இயேசு கிறிஸ்துவின் இறுதி மணிநேரங்களில், பல கூட்ட மக்கள் அவரைச் சூழ்ந்திருந்த போதிலும், கெத்சமனே தோட்டத்தில் தனிமையை ஆழமாக உணர்ந்தார். உங்களுக்கு அதிக செல்வம், செல்வாக்கு, புகழ் இருந்தும் தனிமையில் வாடிக் கொண்டிருக்கலாம். தனிமையின்

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....

செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி
மேடவாக்கம், சென்னை - 100.
An Echo of His Call Institution
மாணவர் சேர்க்கை
PRE.K.G. முதல் X STD வரை
➢ அனுபவமிக்க ஆசிரியர்கள்
➢ சிறந்த பயிற்சி
➢ விளையாட்டு முறைக்கல்வி
➢ நிறைந்த விளையாட்டுக் கருவிகள்
➢ ஓவியம் மற்றும் வண்ணம் தீட்டுதல்
➢ பாட்டு, நடனம் & கலைச் செயல்பாடுகள்
➢ ஆங்கிலப் பேச்சுப்பயிற்சி
➢ குறைந்தக் கல்விக் கட்டணம்
➢ குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்
பள்ளி அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற தொடர்பு கொள்ள :
Ph. 963 963 1295,044 - 2278 0574

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!

| | | |
|---|---|---|
| 1. ஜெப உதவி | – | 24 மணி நேரம் |
| 2. அழைப்பின் எதிரொலி | – | பத்திரிகைகள் (16 மொழிகள்) |

தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ்.

| | | |
|---|---|---|
| 3. வேதாகமக் கடித முறைக் கல்வி | – | தமிழ், ஆங்கிலம், இந்தி |
| 4. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்) | | |
| 5. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் | – | (சேப்பாக்கம், வேளச்சேரி & சந்தோஷபுரம்) |
| 6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்) | | |
| 7. பயிற்சி வகுப்புகள் – கருத்தரங்குகள் | | |
| 8. சுவிசேஷக் கூட்டங்கள் | | |
| 9. கைப்பிரதி வினியோகம் | – | தொடர் ஊழியம் |
| 10. சுவிசேஷ அச்சகம் | – | சுவிசேஷ பிரசுரங்கள் |
| 11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி | – | கிராம ஆங்கிலப் பள்ளி |
| 12. சிறுவர் வேத பாடசாலை (சேப்பாக்கம்) | – | ஞாயிறு காலை 10.30 மணி |
| & (வேளச்சேரி, பாலாஜி நகர் & சந்தோஷபுரம்) | | மாலை 3.00 மணி |
| 13. அதிகாலை ஆராதனை | – | ஞாயிறு காலை 5.30 மணி |
| 14. ஆயத்தக் கூட்டம் | – | ஞாயிறு காலை 8.00 மணி |
| 15. தமிழ் ஆரதனைகள் | – | ஞாயிறு காலை 8.30 மணி |
| 16. வாலிபர் கூட்டம் | – | ஞாயிறு காலை 11.00 மணி |
| 17. ஐக்கிய உணவு | – | ஞாயிறு மதியம் 1.00 மணி |
| 18. இந்தி ஆராதனை | – | ஞாயிறு மாலை 4.00 மணி |
| 19. தெலுங்கு ஆராதனை | – | ஞாயிறு மாலை 5.00 மணி |
| 20. ஆங்கிலம் – இந்தி ஆராதனை | – | ஞாயிறு மாலை 6.00 மணி |
| 21. கருத்து நேரம் | – | ஞாயிறு இரவு 7.00 மணி |
| 22. பெண்கள் ஆராதனை | – | புதன் மாலை 5.30 மணி |
| 23. ஆண்கள் ஆராதனை | – | வெள்ளி இரவு 7.00 மணி |
| 24. சீஷத்துவக் கூட்டம் | – | சனி மாலை 6.00 மணி |
| 25. வீட்டுக் கூட்டங்கள் | – | செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி |
| 26. விசேஷ திருவிருந்து | – | பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி |
| 27. ஊழியர்கள் கூடுகை | – | முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி |
| 28. பெற்றோர் ஜெபம் | – | முதல் ஞாயிறு மாலை 4.00 மணி |
| 29. இரவு ஜெபம் | – | 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி |
| 30. உபவாச ஜெபம் | – | இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி |
| 31. திருவிருந்து | – | 2–ம் ஞாயிறு ஆராதனைகள் |
| 32. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் | – | தினமும் இரவு 10.00 மணி (தொலைபேசி மூலம்) |
| 33. பணியாளர் ஜெபம் | – | தினமும் காலை 9.00 மணி |
| 34. அலுவலகம் | – | தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர) |

# அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

## இந்திய மாணாக்கர்களுக்கு

## I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

– ஆசிரியர்

## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

# அழைப்பின்எதிரொலி பத்திரிகையை

## இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல் வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## இயேசு கிறிஸ்து! – அற்புதங்களைச் செய்பவர்!

### ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் பிதாவானவர் அவனைக் கனம் பண்ணுவார். ~ யோவான் 12:26.

பல்வேறு சூழ்நிலைகளில் தேவன் என்னோடிருந்து பலத்தக் காரியங்களைச் செய்து வந்திருக்கிறார். நமது சென்னையிலுள்ள தலைமைச் சபையிலும் வெளியூர்களில் நடைபெறும் ஊழியங்களிலும் தேவன் பிரத்தியட்சமாகத் தலையிட்டு அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்து என்னைக் கனம் பண்ணியிருக்கிறார். இதன்மூலம் தேவன் **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களின் வாசனை உலகின் பல பாகங்களில் பரவக் கிருபை செய்தார். அவருக்கே மகிமையை செலுத்துகிறேன்.

ஒருமுறை ஆஸ்திரேலியா தேசத்தில் சிட்னி, மெல்போன், பிரிஸ்பேன் போன்ற இடங்களில் நான் ஊழியம் செய்து கொண்டிருந்தேன். அந்த நாட்டில் உள்ள ஏராளமான மக்கள் தேவனுடைய மகிமையானத் தொடுதலை பெற்று அனுபவித்தனர்.

ஒரு நாள் நான் தங்கியிருந்த வீட்டுக்கு ஒரு ஆஸ்திரேலியா தம்பதியினர் கணவனும், மனைவியுமாக என்னைப் பார்க்க வந்திருந்தனர். அவர்களிடம் பேசிக்கொண்டிருக்கும்போது, தங்களுக்குத் திருமணமாகி சுமார் பதிமூன்று வருடங்களாகியும் குழந்தை பாக்கியம் இல்லை என்று மிகவும் கண்ணீர் மல்கத் தெரிவித்தனர். மட்டுமின்றி குழந்தை இல்லாத காரணத்தால் அவர்கள் இரண்டு பேரும் சமாதான முறையில் விவாகரத்து பெற்றுக்கொள்ளப் போவதாக என்னிடம் கூறி அவர்களுக்காக ஜெபிக்கும்படி வேண்டினர் (அவர்களுடைய நாட்டில் விவாகரத்து என்பது மிகவும் சாதாரணமான ஒன்றாகக் கருதப்பட்டது).

எனக்கு அது மிகவும் வருத்தத்தைக் கொடுத்தது. அப்போது நான் உங்களுக்குக் குழந்தைகளைக் கொடுக்கும்படி தேவனிடம் வேண்டுதல் செய்யட்டுமா? என்று கேட்டேன். அப்போது இருவரும் என் வார்த்தைகளை கருத்திற்கொள்ளாமல் வேடிக்கையாகச் சிரித்தனர். எத்தனையோ பெரிய மருத்துவர்கள் முயற்சி செய்தும் நடக்கவில்லை. அது ஜெபத்தால் எப்படி முடியும் என்று என்னிடம் கேட்டனர். அப்போது நான் தேவனுடைய மகத்துவத்தைக் குறித்தும் அவருடைய வல்லமையைக் குறித்தும் விளக்கிப்பேசி "ஆண்டவரே இந்தத் தம்பதியினருக்குப் பிள்ளைகளை நீர் கொடுக்கவேண்டும்" என்று ஊக்கமாக ஜெபம் பண்ணினேன். மட்டுமின்றி விசுவாசத்தைக் குறித்தும், அதன் மேன்மையைக் குறித்தும் அவர்களுக்கு விளக்கிக்கூறினேன்.

கர்த்தருக்கு ஸ்தோத்திரம், சுமார் இரண்டு மாதங்களுக்குப் பின் நான் அந்த நாட்டைவிட்டு இந்தியாவுக்குப் புறப்படும்படி விமான நிலையத்திற்குச் சென்றேன், திடீரென்று அதே கணவனும், மனைவியும் ஒரு பெரிய பார்சல் நிறைய வெகுமதிப்பொருட்களுடன் என்னிடம் ஓடோடி வந்தனர். நான் செய்வதறியாது அந்தத் திரள்கூட்டத்தில் திகைத்து நின்றேன். ஏனென்றால், அந்த இரண்டுபேரும் சுமார் 10 நிமிடநேரம் மிகவும் உரத்த சத்தமிட்டு அழுது கதறினர். அங்கு நின்ற என் சக பயணிகள் எல்லாவற்றையும் அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.



கர்த்தரின் அற்புதத்தால் விளைந்த மூன்று குழந்தைகளுடன் ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பம்.

கடைசியில் அந்த கணவர் தன் வாயைத் திறந்து "ஐயா என் மனைவி கர்ப்பமுற்றிருக்கிறார்கள். இன்றுதான் மருத்துவர்கள் இதனைத் திட்டமாக எங்களுக்குச் சொன்னார்கள்" என்று கூறி ஆனந்தக் கண்ணீர் சிந்தினர். அவர்கள் கொண்டு வந்த பார்சலில் ஏராளமான துணிமணிகள் மற்றும் ஊழியத்திற்குத் தேவையான பல உபகரணங்கள் வைக்கப்பட்டிருந்தன. கர்த்தர் அந்தக்குடும்பத்திற்கு முதலாவது ஒரு பெண் குழந்தையையும், தொடர்ந்து இரண்டு ஆண் பிள்ளைகளையும் கொடுத்து அவர்களை ஆசீர்வதித்திருக்கிறார்.

அன்பு நண்பரே, இதே அற்புதத்தை உங்களுக்கும் செய்ய கர்த்தர் வல்லவர். நீங்களும் உங்கள் தேவை எதுவாக இருந்தாலும் கர்த்தரை நம்பி அவரிடம் திடவிசுவாசத்துடன் கேளுங்கள். பிள்ளைகள் இல்லாத குடும்பங்களில் பிள்ளைகளைக் கொடுக்கவும், தீராத வியாதியில் வேதனைப்படுகிறவர்களுக்கு சுகத்தையும், இதர ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் நான் பிரசங்கிக்கிற இரட்சகரும் ஆண்டவருமாயிருக்கிற இயேசுகிறிஸ்து தர வல்லவர். அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார். அவருக்கே மகிமை. **பெரிதும் பலத்தவர்களுமாக்குவேன்... உங்கள் சந்ததியாரையும் ஆசீர்வதிப்பேன்.** (எண்ணாகமம் 14:12,24).

தேவன் உங்களைக் கொண்டு ஏதோ ஒரு பெரியக் காரியத்தைச் செய்யத் திட்டமிட்டிருக்கிறார். அதன் மூலம் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்த தேவன் திட்டமிட்டிருக்கிறார். ஆகவே, சோர்ந்து போகாதிருங்கள். ஏனென்றால், உங்கள் இக்காலத்துப் பாடுகள் இனி வரும் மகிமைக்கு நிகராகாது... அவர் உங்கள் வாழ்க்கையில் என்ன செய்யப் போகிறார் என்பது இதுவரையிலும் உங்களுக்கு மறைபொருளாகவே இருக்கிறது. அது அப்படித் தான் இருக்கும். ஆனால் தேவன் உங்கள் வாழ்க்கையின் பாதைகளைச் செவ்வைப் பண்ணி, உங்கள் முகத்தைப் பிரகாசிக்கப் பண்ணி, உங்களுக்கு சகாயம் கட்டளையிடுவார். உங்கள் வாழ்க்கைப் பயணத்தின் உச்சக்கட்டத்தில் வந்துவிட்டீர்கள். இனி பின்னிட்டுப்பார்க்காதீர்கள். நீங்கள் எடுத்து வைக்கப்போகும் அடுத்த அடி உங்கள் வெற்றியின் முதல் படியாக இருக்கப் போகிறது. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

*******

... 7–ம் பக்கத் தொடர்ச்சி



ஆழங்களை தேவனால் புரிந்து கொள்ள முடியும்; ஆதாமின் தனிமையை உணர்ந்து, அதை நீக்கத்தான் ஏவாளை தேவன் உருவாக்கினார். இருப்பினும் வர்ணிக்க முடியாத தனிமை மற்றும் நொறுங்கின நிலைமையின் வேதனையினால் நம்மில் பலரும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

தேவன் உங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்; உங்களை அவிழ்த்து அவரிடத்தில் கொண்டுவர அவர் விரும்புகிறார்.

நீங்கள் நொறுங்கிப்போய், அவமானமடைந்து, தோற்கடிக்கப்பட்டு இருக்கலாம். ஆனால் இன்று உங்களை அவிழ்க்க தேவன் விரும்புகிறார்.

**நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்.** சங்கீதம் 34:18.

**இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார், அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார்.** சங்கீதம் 147:3.

**... உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம் பண்ணுகிறேன்.**
ஏசாயா 57:15.

புதிதாக தேவன் ஒன்றைக் கட்டுவதற்கு நொறுங்குதல் அடிப்படையான தேவையாக இருக்கிறது.

பாவத்தினாலும், கெட்ட பழக்க வழக்கங்களினாலும், வியாதியினாலும், பொருளாதார நெருக்கடிகளினாலும், பரம்பரை சாபங்களினாலும், பாரம்பரியங்களினாலும், நீங்கள் ஒருவேளை கட்டப்பட்டிருக்கலாம். தேவன் இன்னும் உங்களை நேசிப்பதினாலும், அவரிடம் நீங்கள் மறுபடியும் வரவேண்டுமென்பதாலும், உங்களைக் கட்டவிழ்க்க தேவன் விரும்புகிறார். தேவனை விட்டு அதிக தூரத்தில் நீங்கள் ஓடிக்கொண்டிருப்பதாக நீங்கள் உணர்ந்தாலும், "நீ என்னிடத்தில் திரும்பி வா" என்று அவர் கூறுவதை நினைவு கூறுங்கள். அவரிடத்தில் திரும்பி வருவீர்களா?



உங்கள் கடந்த காலத்தைப் பற்றி தேவன் கவலைப்படுவதில்லை. ராகாப், மத்தேயு, சகேயு போன்றவர்களுக்கு ஒரு கடினமான கடந்த காலம் இருந்தது. ஆனால், அவர்களது கடந்த காலம், அவர்களது நிகழ்காலத்தையோ, எதிர்காலத்தையோ தீர்மானிக்கவில்லை. தேவனுக்கு நீங்கள் வேண்டும்! தேவன் உங்களைக் கட்டவிழ்க்க உங்களுக்கு சித்தம் உண்டா?

அநேகர் இருவழிச் சந்தியில் நின்று கொண்டிருக்கிறார்கள்; அவரிடம் நீங்கள் சரணடைய இன்றே உங்கள் மனதில் தீர்மானியுங்கள்.

அவ்வாறு சரணடைய நீங்கள் மறுத்தால், தேவன் உங்களைப் போக விட்டுவிடுவார். ஆனால், அதின் பின்விளைவுகளை நீங்கள் சந்திக்க நேரிடும்.

நீங்கள் தேவனுக்குத் தேவை. ஞாபகத்தில் நிறுத்திக் கொள்ளுங்கள்.

*******


## தேவை

**சென்னை – அழைப்பின் எதிரொலியின் நெகேமியா வேதாகமக் கல்லூரி**

*** இந்தி மொழி ***

**ATA - Registered Candidate for Membership**

**DEAN (Residential):**

அனுபவத்துடன் கூடிய இந்தி இறையியலாளர் (Hindi Theologian) M.Div. / M.Th. தகுதியுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். தகுதியுள்ள இந்தி மாணவர்களும் தேவை. விண்ணப்பியுங்கள்.

E.mail: sam@echoofhiscall.org
WhatsApp: (+91) 98410 71858


## அன்பான வாசகர்களின் கவனத்திற்கு . . .

### போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் சுயசரிதை

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் சுயசரிதையை புத்தக வடிவில் முடிப்பதற்கான நிறைவுக் கட்டத்தில் இருக்கிறோம். **நமது போதகரின் ஊழியத்தின் மூலம் நீங்கள் பெற்ற நன்மைகளை 10 வரிகளில் சாட்சியாக எழுதி அனுப்பவும்.** கூடுதலாக தங்கள் புகைப்படத்தை அனுப்பினால் அதனை சுயசரிதை புத்தகத்தில் சேர்த்து வெளியிட உதவியாக இருக்கும்.

\- ஆசிரியர்

### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| **Account Name** | **: ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST** |
| **Account Number** | **: 1023 2923 805** |
| **Bank Name** | **: STATE BANK OF INDIA** |
| **Branch** | **: TRIPLICANE, CHENNAI - 600 005** |
| **IFSC Code** | **: SBIN 0000249** |
| **SWIFT Code** | **: SBI NIN BB 455** |

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## அழைப்பின் எதிரொலி

**YouTube (யூடியூப்)**

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப் (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### 1. Bank : State Bank of India

Branch : Triplicane, Chennai-5
Name : S. Sam Selva Raj
A/C No. : 1023 2934 679
IFSC : SBIN 00 00 249
SWIFT CODE : SBI NIN BB 455

### 2. Bank : ICICI Bank

Branch : Anna Salai, Chennai-6
Name : Echo of His Call
A/C No. : 6038 0502 2319
IFSC : ICIC 000 6038

### 3. Bank : State Bank of India

(This Account is for Tax Exemption for Indians only )

Branch : Triplicane, Chennai-5
Name : Echo of His Call Educational Trust
A/C No. : 1023 2923 805
IFSC : SBIN 00 00 249

Google Pay: 98410 71858
PayPal : SAM SELVA RAJ
*****
E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**✻ வருட சந்தா ரூ. 100/– ✻ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**
**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**
தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

Regd. with the RNI under No. 67380/93
Licenced to post without pre-payment
Postal Regn. No. TN/CH/(C)/197/24-26
Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26
Date of Publication: last week of previous month
Date of Posting : 27th & 28th of previous month
Posted at "Egmore RMS / 1 Patrika Channel"
on 28th MAY 2024
If un-delivered please return to:
ECHO OF HIS CALL (TAMIL)
P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.
Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766

*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at Echo of His Call Printers, New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**